1982 மார்ச் 19]

"இருளர்" சமுதாய மக்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம்.

*வினா எண் 458—திரு பி. எஸ். துரைசாமி :—மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) "இருளர்" என்கின்ற சமுதாயத்தைச் சேர்ந்த பழங்குடி மக்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், "இருளர்" அதிகம் இருக்கின்ற பர்கூரில் அத் திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) இருளர் என்ற பழங்குடியினர்க்கு மட்டும், தனியாக வீடுகட்டும் திட்டம் ஏதும் இல்லை. மாநிலத்திலுள்ள அனைத்துப் பழங்குடியினருக்கும் வீடுகட்டும் திட்டம் உள்ளது. இருளர்களுக்கும் வீடுகட்டுவது அதனுள் அடங்கும்.

(ஆ) மேற்படி திட்டத்தில் ஹரூர் பகுதியில் 25 வீடுகளும், சித்தேரி மலைப் பகுதியில் 201 வீடுகளும் கட்டுவதற்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரால் பரிசீலிக்கப் பட்டு வருகிறது.

திரு. எம். சேதுராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இருளர்கள், விவசாயிகளின் நன்மையைக் கருதி, அவர்களுடைய பயிர்களை நாசம் செய்யாமல் இருப்பதற்காக எலிகளைப் பிடித்தும், அதே நேரத்தில் விஷப் பாம்புகள் கிராமத்தில் இருக்கும் மக்களைத் தொந்தரவு கொடுக்காத வகையில் அவற்றிடமிருந்து அந்த மக்களைப் பாதுகாத்தும் சேவை செய்து வருகின்ற காரணத்தால், அந்த இனத்தவர்களுக்கு வீடுகள் கட்டுவது மட்டுமல்லாமல் நிலங்கள் கூட கொடுத்து அவர்கள் வாழ்க்கையை முன்னேற்றுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் என்ற பிரிவினருக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு வகையான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகளில் இருளர்களுக்கும் சேர்த்து, அந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படும்.